# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
# C.C. No. 126/2025 D.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பிரியா | க–பெ/ த–பெ | இராமலிங்கம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2026**

-----------------------------------------------------------------------------------------------

<u>04.08.2026</u>

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் 20/16, பெருமாள் செட்டியார் சந்து, முத்துப்பட்டினம், காரைக்குடி. எனது மகள் நித்யா எந்த ஊரில் குடியிருந்து வருகிறார். எங்கு பணி பார்க்கிறார் என்றால் செல்லப்பன் பள்ளியில் பணி பாக்கிறார். JPR பைனான்சில் கடன் பெற்றுள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்காக கணேஷ் எனது மகளுக்கு ரூ.50,000/– கடன் கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதற்காக கணேசன் கடன் கொடுத்துள்ளார் என்றால் JPR பைனான்சிற்காக கடன் கொடுத்தார். எனது மகள் நித்யா மீது காசோலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பாண்டியராஜனிடம் இருந்து கடன் பெறவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் அல்லது வேறு ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் ரூ. 50,000/– கடன் பெற்றுள்ளேன். JPR பைனான்ஸ் மீது அல்லது கணேசன் மீது ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை.

2) 6 வாரங்கள் யாரிடம் எவ்வளவு தொகை செலுத்தினேன் என்று எனது முதல் விசாரணையில் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான், கணேசனிடம் ரூ. 5,550/–

வாரம்தோறும் என 6 வாரம் கொடுத்தேன். கணேசனிடம் தொகை கொடுத்தற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அவர் வைத்துள்ள கடன் அட்டையில் வரவு வைத்துள்ளார். நான் JPR பைனான்சிடம் இருந்து எந்த ஒரு கடனும் பெறவில்லை என்றாலும், வழக்கு புகார்தாரரிடம் இருந்து கடன் பெற்றேன் என்றால் JPR பைனான்ஸ் பாண்டியராஜனிடம் கடன் கேட்டேன், அதற்கு கணேசன் மூலமாக G-Pay ரூ. 50,000/- எனது மகளுக்கு கொடுத்தார். கணேசன் என் மகளுக்கு கொடுத்தாக கூறும் தொகைக்கும், தற்போதைய வழக்கிற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்றாலும், புகார்தாரர் பாண்டியராஜனிடம் இருந்து நேரடியாக நான் கடன் பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரரிடம் இருந்து கடன் தொகையை பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக புரோநோட் மற்றும் காசோலை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.04 17:07:46 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.